சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்
OS 143/2014

பெயர். தாந்து சிவபிரகாசம்(பி.சா.3) நாள் 19.01.2021

**<u>பி.சா.3 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் விழுதமங்கலத்தில் குடியிருக்கிறேன். வாதியின் தந்தை ஆறுமுகம் மதுராந்தகத்தை சேர்ந்தவர். வாதியின் தந்தை ஆறுமுகம் மதுராந்தகத்தில் நகரபகுதியில் கடை நடத்தி வந்தார் என்றால் சரிதான். ஆறுமுகம் நடத்தி வந்த கடைக்கும் மதுராந்தகம் சார் பதிவாளர் அலுவலகம் நடத்தி வந்த கடைக்கும் இடையில் 200 அடி தூரம் இடைவெளி இருக்கும் என்றால் சரிதான். ஆறுமுகம் ஆவண எழுதும் நபர்களுடன் பழக்கமானவர் என்றால் சரிதான். ஆறுமுகத்திற்கு எத்தனை குழந்தைகள் என்றால் அது எனக்கு தெரியாது. ஆறுமுகம் எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு தெரியாது. ஆறுமுகம் இறப்பதற்கு 2,3 வருடங்களுக்கு முன்பில் இருந்து உடல் நிலை சரியில்லாமல் படுத்த படுக்கையாக இருந்தார் என்றால் படுத்த படுக்கையாக இல்லை, ஆனால் உடல்நிலை சரியில்லாமல்தான் இருந்தார். வாதி குணசீலன் ஆறுமுகத்திற்கு மலர் மருத்துவமனையில் சிகிச்சை அளித்தார் என்றால் அது எனக்கு தெரியாது. மலர் மருத்துவமனையில் அளிக்கப்பட்ட சிகிச்சைக்கு பின்னரும் ஆறுமுகம் பேச முடியாத நிலையில் இருந்தார் என்றால் சரியல்ல, ஆறுமுகம் பேசினார். மதுராந்தகத்தில் இருந்த ஆவண எழுத்தர்களை விட்டு விட்டு ஏன் 20 கி.மீ தள்ளி இருந்த என்னை அழைத்தார் என்றால ் நான் ஏற்கனவே பரிச்சயமானவர். ஆவணம் எழுதப்பட்டதாக சொல்லப்படும் காலத்தில் எப்படி என்னை அடைந்தார் என்றால் அவரது மகன் குமார் மூலம் என்னை அழைத்தார். உயில் எழுதுவதற்காக என்னை வரவழைத்தார். நான் உயிலை வீட்டில் வைத்து தயாரித்தேனா என்று கேட்டால் நான் மதுராந்த்கத்தில் உள்ள காந்தி சிலைக்கு அருகில் இருந்த கடையில் வைத்து எழுதினேன். உயிலில் இருந்த வாசகங்களை குமாரும் தெரிவித்தார் ஆறுமுகமும் தெரிவித்தார். உயில் எத்தனை மணிக்கு எழுத ஆரம்பித்தேன் என்றால் 11 மணிக்கு எழுத ஆரம்பித்தேன். 12.8.2000 ம் தேதியில் உயில் எழுதினேன். உயில் எழுதும்போது நான் மட்டும்இருந்தேனா என்று கேட்டால் உயிலை தயாரித்தபோது

(Draft) நான் மட்டும்தான் இருந்தேன். உயிலை தயாரித்து கொடுத்துவிட்டு நான் ஊருக்கு சென்று விட்டேனா என்றால் ஆறுமுகம் அவருடைய வீட்டில் வைத்து அதில் கையெழுத்து செய்தார். நான் ஆறுமுகத்திடம் கையெழுத்து வாங்கியதாக சொல்லப்படும் வீட்டில் வாதி குணசீலன் தான் குடியிருந்தார் என்று கேட்டால் அது எனக்கு தெரியாது. ஆறுமுகத்தின் மனைவி இருந்தாரா என்று கேட்டால் அது எனக்கு தெரியாது. குப்புசாமி என்ற ஒருவர் இருந்தார். குப்புசாமி மட்டும்தான் இருந்தாரா என்று கேட்டால் ஆமாம். உயிலை ஏன் பதிவு செய்யவில்லை என்றால் ஆறுமுகம் உயிலை பதிவு செய்ய விரும்பவில்லை. பி.சா.ஆ. 4 உயிலில் உள்ள கையெழுத்து ஆறுமுகத்தின் கையெழுத்து இல்லை என்றும் அது எங்களால் மோசடியாக உருவாக்கப்பட்ட கையெழுத்து என்றால் சரியல்ல. ஆறுமுகம் உயில் எழுதியதாக சொல்லப்படும் நாளில் உயில் எழுதக்கூடிய உடல் நிலை மற்றும் மனநிலையில் இல்லை என்று சொன்னால் பேசும் நிலையில்தான் இருந்தார் நல்ல நிலையில் இருந்தார். ஆறுமுகம் கையெழுத்து செய்தவுடன் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். பி.சா.ஆ. 4 பொய்யான உயில் என்றும் அது வழக்கிற்கு பின்னிட்டு தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றும் சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ. 4 முன்தேதியிட்டு தயாரித்ததால்தான் அதனை நாங்கள் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் ஆறுமுகம் பதிவு செய்யவேண்டியது இல்லை என்று சொன்னதால பதிவு செய்யவில்லை. நாங்கள் முன்தேதியிட்டு பி.சா.ஆ. 4 ஐ தயாரித்திருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ. 4 செல்லத்தக்க ஆவணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பி.சாஆ. 4 பொய்யான ஆவணம் என்பதால் அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல.